# IN THE COURT OF II ADDITIONAL DISTRICT & SESSIONS JUDGE, THANJAVUR

## DEPOSITION OF WITNESS

## OS .No.150/2022

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | | **திருமதி.நளினி** | ஊர் | : | |
| க.பெ. | : | **திரு.மனோகர்** | மாவட்டம் | : | |
| வயது | : | | தொழில் | : | |

2025ம் ஆண்டு ஜுலை திங்கள் 15-ஆம் நாள் **பி.சா.2ன்** வாக்குமூலம் (1969ம் ஆண்டின் 54-வது விதியின் 95வது பிரிவின் ஏற்பாட்டின்படி) திரு.D.சுரேந்தர் மொழிபெயர்ப்பாளர், என்பவரால் ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்து வைக்கப்படுகிறது.

**முதல் விசாரணை**

நான் இவ்வழக்கில் 3ஆம் தரப்பினர். சாட்சியத்தின் முதல் விசாரணையை நிரூபண வாக்குமூலமாக தாக்கல் செய்கிறேன். இதில் உள்ள விபரங்கள் எல்லாம் நான் சொன்னவைதான். அதில் உள்ள கையொப்பம் என்னுடையது தான்.

பென்சன் புத்தகத்தின் சான்று நகல் தாக்கல் செய்கிறேன் அசல் கொண்டு வந்துள்ளேன் அது **சா.சா.ஆ.1** ஆகும். வங்கி பாஸ்புத்தகத்தில் அசல் கொண்டுவந்துள்ளேன்நகல் தாக்கல் செய்கிறேன் அது **சா.சா.ஆ.2** ஆகும். எனது வங்கி கணக்கின் கணக்கு நகல் 1.4.2016 முதல் 31.8.2018 முடிய உள்ளது 14 தாள்கள் வங்கியிலிருந்து பெற்றது தாக்கல் செய்கிறேன் அது **சா.சா.ஆ.3** ஆகும். குடும்ப அட்டை நகல் தாக்கல் செய்கிறேன் அசல் கொண்டு வந்துள்ளேன் அது **சா.சா.ஆ.4** ஆகும்.

**வாதி தரப்பில் குறுக்குவிசாரணை**

1, 2 பிரதிவாதிகள் என்னுடைய மகன்கள்என்றால் ஆமாம். நான் 2வது மகனுடன் வசித்து வருகிறேன் என்றால் ஆமாம். 2வது பிரதிவாதி என்ன வேலை செய்கிறார் என்றால் வேலை கிடைக்கும் போது நான்கு சக்கர வாகனம் ஒட்ட போவார். அவருக்கு வேறு என்ன வருமானம் உள்ளது என்றால் தெரியாது. என்னுடைய மகனுக்கு சொற்ப வருமானம் என்று சொல்லியுள்ளேனே அது எவ்வளவு என்றால் சரியாக சொல்லமுடியாது. எனக்கு தெரிந்து என் மகன் எவ்வளவு வரும் என்றால்

இரண்டாயிரம் வரும். என் குடும்ப வருமானம் யார் பார்க்கிறார் என்றால் நான்தான். குடும்ப வரவு செலவு யார் பார்க்கிறார் என்றால் நான்தான். மாதாந்திரம் குடும்பத்திற்கு எவ்வளவு செலவாகும் என்றால் 15 லிருந்து இருபதாயிரம் ஆகும். 15 லிருந்து இருபதாயிரத்தை என்னுடைய ஓய்வூதியத்திலிருந்து மகனுடைய சம்பாத்திலிருந்து செய்வேன் என்றால் ஆமாம். வங்கி கணக்கு பட்டியலை 2016 க்கு முன்பும் 2018 பின்பும் உள்ளதை வாங்கி தாக்கல் செய்யவில்லை என்றால் ஆமாம். வங்கி கணக்கு புத்தகம் 22.5.2023லிருந்து 30.12.2023 காலகட்டத்திற்குரியது என்றால் ஆமாம். அந்த புத்தகத்தில் எனக்கான பென்சன் மாத கடைசி தேதியில் வரும் என்றால் ஆமாம். அந்த பென்சன் தொகை முழுவதையும் 5 தேதிக்குள் எடுத்துவிடுவேன் என்றால் 6 தேதிக்குள் முடிந்துவிடும். மேற்படி பணத்தை யார் எடுத்து வருவார் என்றால் எனது சிறிய மகன் எடுத்துவருவார். பாஸ்புத்தகத்தில் உள்ளபடி பணத்தை எடுத்து குடும்ப செலவு செய்வேன் என்றால் ஆமாம். சா.சா.ஆ. 3ஆவணம் எங்கு வாங்கியது என்றால் பிரான்ச்சில் வாங்கியது. அதில் ஒவ்வொரு மாதமும் கடைசி தேதியில் ஓய்வூதியம் வந்ததாக உள்ளது என்றால் ஆமாம். வங்கி கணக்கில் அட்டை மூலம் பணம் எடுத்துள்ளோம் என்றால் ஆமாம். அவ்வப்போது குடும்ப செலவுக்காக நான் எடுத்து வரச்சொல்வேனா என்றால் ஆமாம். வரவு செலவு கணக்கு எழுதும் வழக்கம் உண்டா என்றால் உண்டு. டைரியில் எழுதுவாரா என்றால் நோட்டில் எழுதுவார். அந்த நோட்டை பார்த்தார் வருமானமும் செலவும் தெரியும் என்றால் ஆமாம். எங்கள் வீட்டில் ஆம்பாஸிட்டர் கார் சொந்தமாக வைத்திருந்தோமா என்றால் முதலில் வைத்திருந்தோம் தற்போது இல்லை. என் மகன் அவசர செலவிற்காக குடும்ப தேவைக்காகவும் யாரிடம் கடன் பெற்றுள்ளார் என்றால் தெரியாது. அதைபோல் யார்யாரிடம் கடன் பெற்று அடைத்துள்ளார் தெரியுமா என்றால் தெரியாது. முதல் விசாரணை வாக்குமூலத்தில் 4 சதவீத வட்டி என்பது 3 1/2 லட்சத்திற்கு எவ்வளவு என்றால் தெரியாது. 24 சதவீத வட்டி எவ்வளவு வரும் என்றால் தெரியாது. பிரமாண வாக்குமூலத்தின் விபரங்கள் யார் சொன்னார் என்றால் நான் சொன்னேன். என் மகன் கோவிந்தராஜ் என்பவரிடம் கடன் வாங்கியதை பொறுத்து நான் ஆவணம் பார்த்துள்ளேனா என்றால் இல்லை. என் மகன் மூலமாக வட்டி கொடுத்தற்கு ஏதேனும் ஆவணம் உள்ளதா என்றால் இல்லை. சாதாரணமாக கடன் வாங்கும் போது அதை எழுத்து மூலமாக எழுதி கொள்வோம்

என்றால் ஆமாம். அவ்வாறு எழுதபட்ட ஆவணம் தாக்கல் செய்யவில்லை என்றால் ஆமாம். எந்தெந்த தேதியில் எவ்வளவு தொகை வாங்கியுள்ளார் என்று நேரடியாக தெரியாது என்றால் மறந்துவிட்டேன். எந்த தேதி வரை எவ்வளவு வட்டி எவ்வளவு கொடுத்தோம், தெரியாது என்றால் சரியல்ல. எந்த தேதியில் எவ்வளவு தொகை கொடுத்தோம் என்றால் 3 1/2 லட்சம் கடன் வாங்கி வட்டி மட்டும் கொடுத்துள்ளோம். எந்த தேதியில் எவ்வளவு வாங்கினோம் எங்கு வைத்து கொடுத்தோம் என்றால் ஞாபகமில்லை. என மகனிடம் ரசீது கொடுத்தாரா என்ற விபரம் எனக்கு தெரியாதா என்றால் ரசீது கொடுக்கவில்லை. ரசீது கொடுக்கசொல்லி கேட்டோமா என்றால் கேட்கவில்லை. வட்டி மாற்றம் பண்ணார் என்று சொல்லியுள்ளேனே அது எந்த தேதி என்றால் தேதி மறதாகியுள்ளது. 24 சதவீத வட்டியிலிருந்து அரசாங்க வட்டிக்கு குறைத்து கேட்டதாக சொல்லியுள்ளேனே அது எந்த தேதி என்றால் அது ஞாபகமில்லை. மாத செலவு எவ்வளவு என்பதை காண்பிக்க ஆவணம் உள்ளதா என்றால் இல்லை. வட்டி தொகை கொடுத்தாகசொல்லுகிறேனே எவ்வளவு தொகை என்றால் மாதம் 14 ஆயிரம் வீதம் 10 மாதம் கொடுத்துள்ளேன். 3 1/2 லட்சத்திற்கு 4 சதவீத வட்டி என்றால் மாதம் 1150 என்றால் தெரியவில்லை. 3 1/2 சதவீத வட்டி என்றால் ரூ 1007 தான் வருகிறது என்றால் தெரியவில்லை. முதல் விசாரணையில் சொன்னது போல் மாத வட்டியாக ரூ 14,000 கொடுத்தது உண்மையில்லை என்றால் சரியல்ல. எனது மகன் தான் விபரம் சொல்லி அழைத்து வந்தார் என்றால் ஆமாம். எனது மகன்தான் இந்த வழக்கு போட்டுள்ள விபரத்தை என்னிடம் சொன்னார் என்றால் ஆமாம். இந்த வழக்கு தொடர்பாக எனக்கு நேரடியாக தெரியாது என்றால் தெரியாது. என் மகன் சொன்ன விஷயங்களை உண்மை என்று நம்பி வழக்கில் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. வழக்கு பிரச்சனை எதுவும் நேரடியாக தெரியாது என்றும் எனது மகனுக்காக உண்மைக்கு மாறாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. வழக்கு கடன் பிரச்சனை ஏற்பட்ட காலத்திற்கான கணக்கு பட்டியல் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. நாங்கள் குடியிருக்கும் வீடுதான் வழக்கு கடனுக்கு உள்ளது என்றால் ஆமாம். அந்த வீட்டிற்கான அசல் ஆவணங்கள் வாதியிடம் உள்ளது என்றால் ஆமாம். வழக்கு அடமான கடன் எழுதி கொடுப்பதற்காக எனது மூத்த மகன் சென்னையிலிருந்து வந்து வீட்டில் தங்கி எழுதி கொடுத்தார் என்றால் ஆமாம். அடமான பத்திரம் எழுதி

கொடுத்துவிட்டு வந்து என்னை பார்த்து சொல்லிவிட்டு தான் சென்னைக்கு போனார் என்றால் ஆமாம். கடன் தொகைகள் அடைப்பதற்கு என் மூத்த மகன் பணம் கொடுப்பாரா என்றால் இல்லை. சென்னையில் அவருக்கே சரியா இருக்கும்.

நான் சொல்ல என் உத்திரவுப்படி
தட்டச்சிடப்பட்டு, என் முன்னிலையிலும்,
மேற்பார்வையிலும், சாட்சிக்குப் படித்துக்
காண்பிக்கப்பட்டு சாட்சியால் சரியென்று
ஒப்புக்கொள்ளப்பட்டது.

(ஒம்/- ப ,நாகராஜன்)
2வது கூடுதல் மாவட்ட அமர்வு நீதிபதி,
தஞ்சாவூர்.